# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 82/2024

## CNR.No.TNCB19000

Date: 16.03.2026 PW-1

| பெயர் | ஆனந்த் | வயது | 35 |
|---|---|---|---|
| த/பெ | ராமசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரமடை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 16th March 2026

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கடனுறுதி சீட்டை யார் எழுதினார்கள் என்று தெரியாது. பிரதிவாதிதான் எழுதிக் கொண்டு வந்து கொடுத்தார். எங்கு வைத்து யார் முன்னிலையில் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. அதிலுள்ள விலாசங்கள் யார் சொன்னார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எந்த தேதியில் கடனுறுதி சீட்டை அவர் எழுதினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டில் எழுதியவர் சாட்சி என்று காண்பிக்கப்படும் இடத்தில் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் என் முன்னால் கையெழுத்து செய்தார்கள். கடனுறுதி சீட்டை யார் எழுதினார்கள் என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

சாட்சிகள் கையொப்பம் செய்வதற்கு முன்பாகவே கடனுறுதி சீட்டு எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். சாட்சிகள் இருவர் யார் என்றால் ஒருவர் எனது தம்பி மற்றொருவர் பிரதிவாதியுடன் வந்த சுப்ரமணி. ஏற்கனவே நான் நடத்தி வந்த சீட்டுகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் நடத்தி வரும் சீட்டு கம்பெனி பெயரில் பதிவு செய்யப்பட்டு சீட்டு புத்தகங்கள் அச்சிட்டு அதை வாடிக்கையாளர்களுக்கு கொடுத்து வாடிக்கையாளர்களிடம் பணம் பெற்றுக்

கொண்டு வரவு வைத்துக் கொடுப்போம் என்றால் சரிதான். பழனிச்சாமியை எனது அப்பா காலத்தில் இருந்தே எனக்கு அறிமுகம். எனது தந்தையார் சீட்டு நடத்தி வரும்போது பிரதிவாதி பழனிச்சாமி வாடிக்கையாளராக இருந்து வந்தார் என்றால் சரிதான். என்னிடம் காாண்பிக்கப்படும் T.D.R சிட் பண்ட்ஸ் என்ற பெயரில் நடத்தி வருவதற்கான சந்தா புத்தகம் என்றால் சரிதான்.

அதிலுள்ள தொலைபேசி தொடர்பு எண்கள் எங்களது அலுவலகம் மற்றும் எனது தனிப்பட்ட தொடர்பு எண்கள் என்றால் சரிதான். அந்த சந்தா புத்தகத்திலுள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. சிட் பண்ட்ஸ் ன் பதிவு எண்.10582/2017 என்றால் சரிதான். மேற்கண்ட சிட் பண்ட்ஸ் 03.08.2019 ல் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சிட் புத்தகம் பிரதிவாதி பழனிச்சாமிக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புத்தகம் பி. வா. சா. ஆ. 1 ஆகும். பி. வா. சா. ஆ 1 ஆவணத்தில் 3-ம் தேதி ஏலம் விடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்கண்ட சிட் புத்தகத்தின்படி யார் யார் எவ்வளவு செலுத்தப்பட்டது எவ்வளவு செலுத்தப்பட வேண்டியுள்ளது என்பது தொடர்பான அனைத்து தகவல்களையும் சீட்டு பதிவாளருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த சீட்டு புத்தகத்தின்படி பிரதிவாதி எவ்வளவு செலுத்தியிருக்கிறார் எவ்வளவு செலுத்த வேண்டும் என்றால் முழுவதுமாக செலுத்தி விட்டார். சிட் பாதிவாளரிடம் கொடுத்த கணக்கை பார்த்தால் பிரதிவாதி எவ்வளவு கொடுத்திருக்கிறார் என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். சிட் புத்தகத்தை பிரதிவாதிக்கு கொடுக்கும்போது ஒரு கணக்கு சீட்டையும் கொடுத்திருக்கிறோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வாடிக்கையாளருக்கு சிட் புத்தகத்தை கொடுத்து சந்தா தொகையை வசூலிக்கும்போது மேற்படி சீட்டு புத்தகத்தில் வரவு வைத்து கொடுப்போம் என்றால் புத்தகம் கொடுத்தால் வரவு வைப்போம். வாடிக்கையாளர் பணம் கொடுத்தால் வரவு வைக்காமல் இருக்கமாட்டார்கள் என்றால் ரசீது கொடுப்போம். அந்த ரசீதின் மற்றொரு நகல் எங்கள் நிறுவனத்தில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி 03.08.2019 ம் தேதி ரசீதின் அடிக்கட்டை பார்த்தால் பிரதிவாதி கொடுத்த தொகை தெரியும் என்று சொன்னால் அடிக்கட்டே கிடையாது. கணிணி மூலம் பதிவிறக்கம்

செய்து கொடுக்கப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் கணிணி மூலம் வரவு வைக்கப்பட்ட விபரம் பதிவு செய்யப்பட்டிருக்கும். பதிவு செய்யப்பட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். ஒவ்வொரு சீட்டும் முடியும் போது வாடிக்கையாளருக்கு கொடுத்த புத்தகத்தை திரும்ப பெற்றுக் கொள்வோம் என்றால் சரியல்ல. கணிணியில் வரவு வைக்கப்பட்ட நகலை பதிவாளரிடம் ஒவ்வொரு வருடமும் கணக்கு தாக்கல் செய்யும்போது கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். பி. வா. சா. ஆ 1 புத்தகத்தில் 03.08.2019 ல் ஆரம்பிக்கப்பட்ட சீட்டு குரூப்பில் சீட்டு எண். G.7F/108 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது என்னுடைய கையெழுத்து அல்ல.

எங்களது வாடிக்கையாளரின் புத்தகங்களை பதிவு செய்வற்கு பணியாளர் வைத்திருக்கிறோம் என்றால் சரிதான். அவ்வாறு சீட்டு புத்தகத்தில் பதிவு செய்யும்போது யார் யார் பதிவு செய்தார்கள் என்ற குறிப்பு வைத்திருக்க மாட்டோம். ஆனால் எங்களுடைய அலுவலக ஊழியர்கள் பதிவு செய்து கொடுத்து விடுவார்கள். பி. வா. சா. ஆ 1 சீட்டு புத்தகத்தில் எங்கள் அலுவலக பணியாளர்களில் யார் பதிவு செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி. வா. சா. ஆ 1 சீட்டு புத்தகத்தில் குறிப்பிட்ட குரூப்பில் பணம் கட்டிவிட்டார் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.